SRI T. T. DANIEL : May I know whether Central aid is given for the education of handicapped and also the nature of the appointment that are given to the handicapped?

THE HON. SRI C. SUBRAMANIAM : This question was not discussed at the meeting. I think I answered a similar question in this House or the other House yesterday or day before yesterday. There are many firms who are employing these people, deaf and dumb people. We do not have any concrete scheme for the employment of these people.

Utilisation of Palar waters

* 564 Q.—SRI S.M. ANNAMALAI (on be half of Sri M. P. SARATHI). கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) பாலாற்று நீர் உபயோகம் பற்றிய நிபுணர் குழு பரிசீலனை அறிக்கை எந்த நிலையிலுள்ளது ?

(ஆ) அந்த அறிக்கையையும், அதன்மீது இந்த அரசாங்கம் செய்த முடிவுகளையும் சபையின் முன் வைக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) and (*b*) No Expert Committee as such on Palar waters was appointed but at a conference held in 1956 at Bangalore the technical representatives of the Government of India and the Governments of Madras and Mysore went into the question of Palar waters dispute. As decided in the conference, the Government of Mysore have been addressed for complete dimentioned plants of tanks and for making arrangements for joint surveying and levelling operations.

SRI S. M. ANNAMALAI : மைசூர் சர்க்காருக்கும் சென்னை சர்க்காருக்கும் ஏற்பட்டுள்ள அந்த ஒப்பந்தத்தை மைசூர் சர்க்கார் மீறியிருக்கிறது என்பது உண்மையா ?

THE HON. SRI P. KAKKAN : நான் முதலில் பதில் சொல்லும் போது, சொன்னேன் மைசூர் சர்க்காருடைய டெக்னிகல் எக்ஸ்பர்ட்டுகளும் நம் மாகாணத்து எக்ஸ்பர்ட்டுகளும் சேர்ந்து "மீடிங்" நடத்திப் பரிசீலனை செய்தார்கள் என்று. அப்படியொன்றும் அவர்கள் மீறினதாகத் தெரியவில்லை.

SRI K. VINAYAKAM : பாலாற்றில் எப்போதாவது வெள்ளம் ஓடுகிறதா ? அப்படி ஓடினால், எந்த மாதத்தில் எந்த அளவு ஓடுகிறது என்று சொல்லமுடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : பாலாற்றில் எப்பொழுது பெரு மழை பெய்கிறதோ அப்பொழுது வெள்ளம் வருகிறது. (சிரிப்பு).

SRI A. A. RASHEED : May I know whether measures have been taken to utilise the flood waters of Palar, when they do come?

THE HON. SRI P. KAKKAN : Government have taken measures.

SRI A. GOVINDASAMY : இந்தப் பாலாற்றுப் பிரச்னை பல முறை இந்தச் சபையில் விவாதிக்கப்பட்டு கேள்வியாகவும் கேட்கப்பட்டு வருகிறது. இதுபற்றி நமது அரசாங்கத்தின் முடிவான நடவடிக்கை தான் என்ன என்று அறிய விரும்புகிறேன்,

The Hon. Sri P. KAKKAN : முடிவான அபிப்பிராயம் என்னவென்றால், ஏற்கனவே இரு சர்க்கார் பிரதிநிதிகளும், மத்திய சர்க்கார் பிரதிநிதிகளும் கூடிப் பேசியிருக்கிறோம். மேற்கொண்டு அவர்கள் ஆற்றங்கரைகளின் லெவலை உயர்த்தக்கூடாது என்ற காரணத்தால், சர்வே செய்வதற்கும், லெவல் எடுத்து அடையாளங்கள் வைப்பது பற்றியும் நல்ல முறையில் இரு சர்க்கார்களுக்கும் இடையே ஒரு முடிவான ஏற்பாடு செய்தால் நல்லது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

Sri M. C. MUTHUKUMARASWAMY : தண்ணீர் எப்போதும் வராது அந்தப் பாலாற்றில் ; ஏதோ பெருமழை பெய்த காலத்தில் வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்போதும் வராத இடத்தில் அணை கட்ட வேண்டும் என்று அங்கத்தினர்கள் யாராவது வற்புறுத்தியிருக்கிறார்களா ? அதன்மீது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம். யார் கேள்வி போட்டார், எப்பொழுது போட்டார் என்று தெரியவில்லை.

Sri K. B. S. MANI : பாலாற்றில் எப்போதோ ஒரு தடவை தண்ணீர் வரும்போது, அதற்குப் "பாலாறு" என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறதே, அப்படி வைக்கலாமா? பெயரை மாற்றினாலாவது தண்ணீர் வருமா ?

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் பாலாறு என்று சொல்கிறாரா, பாழாறு என்று சொல்கிறாரா என்று தெரியவில்லை. பாலாற்றில் தண்ணீர் வராததற்கு நான் என்ன செய்வது ? நல்ல ஒரு ஆறு அது. "காவிரி, தென்பெண்ணை, பாலாறு" என்று பாடப் பெற்ற ஒரு பெருமை வாய்ந்த ஆறு என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Sri S. M. ANNAMALAI: பாலார் பேஸின் ரூல்ஸ் என்று இருக்கிறது. பாலாற்றின் பக்கத்தில் யாரும் கிணறு தோண்டக்கூடாது என்று திட்டம் இருப்பதால், அந்தப் பாலார் பேஸின் ரூலையாவது ரத்து செய்ய சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ?

The Hon. Sri P. KAKKAN : பாலாற்றின் பக்கத்திலே சில பேர்கள் பம்ப் செட் வைத்து தண்ணீரை எடுக்கும்போது கீழேயிருக்கும் ஆயக்கட்டுகளுக்கு [illegible] சங்கடம் வருகிறது. அதைப் பார்த்துப் பரிசீலனை செய்து, எந்த இடத்தில் அனுமதி அளிக்கலாம் என்று பார்த்து அரசாங்கம் அனுமதி அளிக்கிறது.

Sri A. VEDARATHNAM : அதிக மழை பெய்கின்ற காலத்திலே இந்த ஆற்றில் தண்ணீர் வருகிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி பெரிய பிரவாகம் வருகிற காலத்தில் அந்தத் தண்ணீரை தேக்கி வைத்துக்கொண்டு பின்னால் விவசாயத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ள ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri P. KAKKAN : பெரிய மழை பெய்து தண்ணீர் வரும்பொழுது அதை உபயோகப்படுத்த ஏற்கனவே பாலாற்றில் பக்க கால்வாய்கள் இருக்கின்றன. பாலாறு 'பாரேஜ்' இருப்பது அங்கத்தினர்களுக்குத் தெரியும். அதன் மூலம் தண்ணீரைத் தடுத்து வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள காவேரிபாக்கம் போன்ற பெரிய ஏரிகளுக்கு இந்த கால்வாய்கள் மூலம் தண்ணீர் கொடுக்கப்படுகிறது.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது கீழே இருக்கும் ஆயக்கட்டுதாரர்களுக்கு பாய்ச்சலுக்கு கெடுதல் ஏற்படும் என்று சொன்னார். அது உண்மைதான். ஆனால் சில பிராந்தியங்களில் பாய்ச்சல் வசதி குறையக்கூடும். பாய்ச்சல் வசதி குறையாதபடி ஆற்றில் கிணறுகள் வெட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

25th March 1960]

THE HON. SRI P. KAKKAN : பக்கத்திலுள்ள கிணறுகளுக்கு தண்ணீர் கொடுக்கத்தான் வேண்டும், வேறு வழியில்லை என்று ஜில்லா கலெக்டர் அவர்கள் பரிசீலனை செய்து சொல்லியதை எற்றுக்கொண்டிருக்கிறோம்.

SRI V. K. KRISHNAMURTHY : பாலாறு பேஸின் சட்டப்படி ஆயில் என்ஜின் வைப்பதற்கு மட்டும்தான் அனுமதி இருக்கிறது. ஆனால் மின் சார பம்பு செட்டு வைப்பதற்கு அனுமதி இல்லை. இம்மாதிரி வேறுபாடு இருப்பது அறமாகுமா ?

THE HON. SRI P. KAKKAN : மின்சார பவர் கொண்டு தண்ணீரை இறைக்கும்பொழுது ஜாஸ்தியாக தண்ணீர் எடுக்கும் என்பதை கனம் அங்கத்தினருக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆதலால்தான் முதலிலே ஆயில் பம்பு செட்டு வைத்துக்கொள்ளுவதற்கு அனுமதி அளிக்கப் பட்டு இருக்கிறது. மின்சார பம்பு செட்டு வைப்பது பற்றி பின்னால் பார்த்துக்கொள்ளலாம்.

Scholarships.

* 565 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government are opposed to the grant of public schools scholarships to Backward Classes in the State; and

(*b*) if so, the reason for the same?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) There is only one public school in the State, namely, the Lawrence School, Lovedale, Nilgiris. In 1957 this Government drew up a scheme for sanction of scholarship to scheduled Castes and Scheduled Tribes in the School and requested the Government of India to share the expenditure on the scheme. The Government of India declined to share the expenditure and this Government dropped the proposal.

SRI N. K. PALANISAMI : Sir, since the admission of students in this school is limited to those who can afford to pay higher fee, is it necessary that we should encourage such institutions?

THE HON. SRI P. KAKKAN : பெற்றோர்கள் அதிகப்படியான சம்பளம் கொடுக்கவேண்டியிருக்கிறது என்று கனம் அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள். தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்லக்கூடும்.

SRI K. VINAYAKAM : இந்த நீலகிரியில இருக்கும் லாரன்ஸ் லவ்டேல் ஸ்கூல் நம்முடைய கல்வி இலாகாவின் சட்டத்திற்கு உட்பட்டதா ? நம்முடைய கலவி இலாகா அதிகாரிகள் அதை தணிக்கை செய்து அது நம்முடைய ஸ்டாண்டர்டுக்கு தகுந்தாற்போல் இருக்கிறதா, இல்லையா என்று எதாவது அறிக்கைகள் ஆண்டுதோறும் விடுகிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அந்தப் பள்ளியிலே மாணவர்கள் செலக்ஷன் செய்யப்படும்பொழுது இந்த மாகாணத்திலுள்ள கல்வி இலாகாதான் அதை பரிசீலனை செய்து மாண்வர்களை தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, this Government or even the Central Government have nothing to do with the management of this school. It is run by a trust. Therefore, there is no question of our officers inspecting this school and looking into its affairs.